## டிசம்பர்–25 – கிறிஸ்து பிறப்புக்காலம் - திங்கள்
### கிறிஸ்து பிறப்புப் பெருவிழா
### "வாக்கு மனிதனானார் நம்மிடையே குடிகொண்டார்" யோவான். 1:14

### முதல் வாசகம் : ஏசாயா 52 : 7 – 10

நற்செய்தியை அறிவிக்கவும், நல்வாழ்வைப் பலப்படுத்தவும் நலம் தரும் செய்தியை உரைக்கவும், விடுதலையைப் பறைசாற்றவும், சீயோனை நோக்கி, "உன் கடவுள் அரசாளுகின்றார்" என்று கூறவும் வருவோனின் பாதங்கள் மலைகள்மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன! இதோ, உன் சாமக்காவலர் குரல் எழுப்பு கின்றனர் அவர்கள் அக்களித்து ஒருங்கே ஆரவாரம் செய்கின்றனர் ஆண்டவர் சீயோனுக்குத் திரும்பி வருவதை அவர்கள் தம் கண்க ளாலேயே காண்பர். எருசலேமின் பாழ் இடங்களே, ஒருங்கே ஆர்ப்பரித்துப் பாடுங்கள் ஆண்டவர் தம் மக்களுக்கு ஆறுதல் அளித்துள்ளார் எருசலேமுக்கு மீட்பு வழங்கியுள்ளார். பிறஇனத்தார் அனைவரின் கண்களும் காண ஆண்டவர் தம் தூய புயத்தினைத் திறந்து காட்டியுள்ளார் மண்ணுலகின் எல்லைகள் யாவும் நம் கடவுள் அளிக்கும் மீட்பைக் காணும்

**பதில்பாடல் :** உலகெங்குமுள்ள அனைவரும் நம் கடவுள் அருளிய மீட்பைக் கண்டடைவர்

### இரண்டாம் வாசகம் : எபிரேயர் 1 : 1 – 6

பலமுறை, பலவகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார். இவரை எல்லாவற்றுக்கும் உரிமையாளராக்கினார் இவர் வழியாக உலகங்களைப் படைத்தார். கடவுளுடைய மாட்சிமையின் சுடரொளியாகவும், அவருடைய இயல்பின் அச்சுப் பதிவாகவும் விளங்கும் இவர், தம் வல்லமைமிக்க சொல்லால் எல்லாவற்றையும் தாங்கி நடத்துகிறார். மக்களைப் பாவங்களிலிருந்து தூய்மைப் படுத்தியபின், விண்ணகத்தில் இவர் பெருமைமிக்க கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார். இவ்வாறு இறைமகன் வான தூதரைவிடச் சிறந்ததொரு பெயரை உரிமைப்பேறாகப் பெற்றார். அந்நிலைக்கு ஏற்ப அவர்களைவிட இவர் மேன்மை அடைந்தார். ஏனெனில், கடவுள் வானதூதர் எவரிடமாவது "நீ என் மைந்தர் இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன்" என்றும், "நான் அவருக்குத் தந்தையாயிருப்பேன், அவர் எனக்கு மகனாயிருப்பார்" என்றும் எப்போதாவது கூறியதுண்டா? மேலும் அவர் தம் முதற்பேறான இவரை உலகிற்கு அனுப்பியபோது, "கடவுளின் தூதர் அனைவரும் அவரை வழிபடுவார்களாக" என்றார்.

### நற்செய்தி : யோவான் 1 : 1 - 18

தொடக்கத்தில் வாக்கு இருந்தது அவ்வாக்கு கடவுளோடு இருந்தது அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார். அனைத்தும் அவரால் உண்டாயின் உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை. அவரிடம் வாழ்வு இருந்தது அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை. கடவுள் அனுப்பிய ஒருவர் இருந்தார் அவர் பெயர் யோவான். அவர் சான்று பகருமாறு வந்தார். அனைவரும் தம் வழியாக நம்புமாறு அவர் ஒளியைக்குறித்துச் சான்று பகர்ந்தார். அவர் அந்த ஒளி அல்ல் மாறாக, ஒளியைக் குறித்துச் சான்று பகர வந்தவர். அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்துகொண்டிருந்தது. ஒளியான அவர் உலகில் இருந்தார். உலகு அவரால்தான் உண்டானது. ஆனால் உலகு அவரை அறிந்து கொள்ளவில்லை. அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார். அவர்கள் இரத்தத்தினாலோ உடல் இச்சையினாலோ ஆண்மகன் விருப்பத்தினாலோ பிறந்தவர்கள் அல்ல் மாறாகக் கடவுளால் பிறந்தவர்கள். வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார். யோவான் அவரைக் குறித்து, "எனக்குப்பின் வரும் இவர் என்னைவிட முன்னிடம் பெற்றவர் ஏனெனில், எனக்கு முன்பே இருந்தார் என்று நான் இவரைப்பற்றியே சொன்னேன்" என உரத்த குரலில் சான்று பகர்ந்தார். இவரது நிறைவிலிருந்து நாம் யாவரும் நிறைவாக அருள் பெற்றுள்ளோம். திருச்சட்டம் மோசே வழியாகக் கொடுக்கப்பட்டது அருளும் உண்மையும் இயேசு கிறிஸ்து வழியாய் வெளிப்பட்டன. கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும் கடவுள்தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார்.

**தியானம்:** கிறிஸ்து பிறப்புப் பெருவிழா எப்பொழுதும் மகிழ்ச்சியானதே, ஒவ்வொரு வருடமும் நாம் ஆவலுடன் எதிர்பார்க்கும் இந்த இனிய நாள் எமக்கு மகிழ்ச்சியான ஒரு நாளே. குறித்த காலம் நிறைவேறியபோது கன்னிமரியாயின் திருவயிற்றில் கருவாகி உலகில் மீட்பராக பிறந்த வரலாற்று நிகழ்வுதான் இன்று நாம் கொண்டாடும் கிறிஸ்மஸ் பெருவிழா. இறைமகன் கிறிஸ்து ஒரு குழந்தை வடிவில் நம்மிடையே பிறந்துள்ளார். "வாக்கு மனிதனாகி நம்மிடையே குடிகொண்டுள்ளார்" (யோவான் 1:14) இவரே உலகின் ஒளி இருள் என்பது அவரிடம் இல்லை. உலகிற்கு வழிகாட்ட வந்த இந்தப் பேரொளியை உலகின் எத்திசைக்கும் எடுத்துச்செல்ல நாம் அனைவரும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். இந்த உண்மையான பேரொளி எம் அனைவரையும் ஒளிர்விக்கும் மாட்சிமை. இறைமகன் இயேசுவின் பிறப்புச் செய்தி மானிடத்திற்குக் கிடைத்தது பெரும் நற்செய்தி. இறைவன் மனிதனோடு சங்கமமாகிய செய்தி. சமூக நீதிக்காக, நேர்மைக்காக ஏங்கி நிற்கின்றவர்களுக்கு நம்பிக்கையை நல்கும் ஒப்பற்ற செய்தி. ஏழைகளுகளுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் மகிழ்ச்சியூட்டும் அன்புச்செய்தி, பெலவீனங்களோடு கூடிய மனிதரை தனது உன்னத திட்டத்தை நிறைவேற்ற பல்வேறு நிகழ்வுகளினூடாகக் கடவுள் பயனபடுத்தி ஒளிவீசச்செய்கின்றார். மனிதன் தன்னை கீழ்படிவோடு ஒப்புக்கொடுக்கும் போது மெய்யான ஒளி பிரகசிக்கின்றது. இந்த ஒளியானது எம் இதயங்களை ஊடுருவிச்செல்ல அனுமதிப்போம். நமது இதயங்களை மூடியிருக்கும் இருளை அது அகற்றட்டும். இறைவனது வல்லமையாகவும், ஞானமாவும் பிறந்துள்ள பாலகன் இயேசு நம்மையும் புதுப்படைப்பாக மாற்ற வல்லவர். நம்மை நாம் அவர்பால் ஒப்படைக்கும்போது நாம் புத்துயிர் பெற்றவர்களாய் மாறுகின்றோம்.